Registered as a News Paper  பக்கங்கள் 6  விலை ரூபா: 5-00

மாநகராட்சி மன்றம்

ஈழநாதம்

EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 19 [02 - 3 - 1993] செவ்வாய்க்கிழமை ஓசை 12

## செயற்கை கால் தயாரிப்பு புதிய தொழில் நுட்பம்

செயற்கைக் கால் தயாரிப்பில் பெங்களூரில் புதிய தொழில் நுட்ப முறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஜெய்ப்பூரில் உருவாக்கப்படும் செயற்கைக் கால்கள் அலுமினியத்தினால் ஆனவையாகும். இப்போது பெங்களூரில் செயற்கைக் கால்கள் கண்ணாடி இழைகள், ஒருவித பசை என்பனவற்றை உபயோகித்து உருவாக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது. இவை பாரம் குறைந்தவை எனவும் செலவு குறைந்தவை எனவும் கூறப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் அகோர குண்டு வீச்சு; 5 பேர் பலி; 10 பேர் படுகாயம்

## பஸ் வண்டி மீதும் தாக்குதல்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா விமானப்படையினரின் இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், உலங்கு வானூர்தியும் இணைந்து நேற்று முன்தினம் மக்கள் குடியிருப்பு மீதும், பயணிகள் பஸ் மீதும் நடத்திய தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் பலியாகினர்; பத்து பேர் காயமடைந்தனர். பொதுமக்களின் பெறுமதிவாய்ந்த பல சொத்துக்களும் நாசமாகின.**

இச் சம்பவங்கள் பற்றித் தெரிய வருவதாவது; நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் மன்னார் மாவட்டத்திலுள்ள கள்ளியடி கிராமத்தின் மேலாக நோட்டமிட்ட இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் திடீரென மக்கள் வாழ்விடங்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இதில் இராசதுரை [49வயது, ஊராவில் மன்னார்] என்பவர் பலியானார். மேலும் வசந்தமலர் [32வயது, கள்ளியடி மன்னார்] புண்ணியலட்சுமி [33 வயது, கள்ளியடி மன்னார்] ஆகியோர் படுகாயமடைந்தனர்.

மீண்டும் அக் குண்டுவீச்சு விமானங்கள் ஓர் உலங்கு வானூர்தியுடன் இணைந்து வந்து மேற்படி பகுதியூடாக பொதுமக்கள் பயணம்செய்து கொண்டிருந்த பஸ் வண்டி ஒன்றை தொடர்ந்து துரத்திச் சென்று அடுத்தடுத்து குண்டுகளை வீசின. அப்போது அதில் பயணம்செய்த சியாமளா [வயது7] என்கின்ற சிறுமி மற்றும் மங்கையற்கரசி [வயது30] ஆகிய இருவரும் பலியாகினர். மேலும் அதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்தனர். இவர்களின் பெயர்விபரம் வருமாறு: கு. தர்மினி, கு.சுபோதினி, கு. தங்கதாஸ், கு. பிரதீபன், கு. தபோதினி [கள்ளியடி மன்னார்]. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற குண்டுவீச்சினால் அங்குள்ள கள்ளியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மற்றும் இரண்டு தனியார் கடைகள் என்பன பலத்த சேதமடைந்தன. மேலும்பொதுமக்களின் உடைமைகளான மோட்டார் சைக்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## 20,000தோட்டத்தொழிலாளர் இன்று வேலை நிறுத்தம்

[கொழும்பு]

தோட்டங்களை தனியார்மயமாக்கியத்தைக்கண்டித்தும் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுதல், நிர்வாகத்தினர் அடாவடித்தனத்தைக் கண்டித்தும் இன்று 35 தோட்டங்களைச் சேர்ந்த 20,000 தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வேலை நிறுத்தம் படிப்படியாகவிஸ்தரிக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு செவிசாய்க்காமல் போனால் மலைநாட்டில் தோட்டங்கள் ஸ்தம்பித நிலையை அடையும் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

தோட்டங்கள் தனியார்மயமாக்கும்போது சம்பந்தப்பட்ட தோட்டங்களின் தொழிலாளர் நலன்பேணப்படவேண்டும் என்பதை தாம் முன்னர் வலியுறுத்தியதாகவும் ஆனால் இன்றுவரை அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

தோட்டங்ளைப் பற்றியும், தொழிலாளர் நிலை பற்றியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்குழுக்களிடையே கொழும்பில் மோதல்

கொழும்புக் கோட்டைப் பகுதியில் இரு தமிழ்க் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் இருவர் கத்திக் குத்துக்குள்ளாகி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கோட்டைரயில்நிலையத்திற்கு அருகில் இரண்டு,கோஷ்டிகளுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இறுதியில் அது கத்திக் குத்தில் முடிவடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதுதொடர்பாக கோட்டைப் பொலீசார் விசாரணைகளை மேற்கொண்டதில் சம்பந்தப்பட்டவர்கள் இரண்டு தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. இது தொடர்பாக ஒரு வாலிபர் பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர் மட்டக்களப்புக்குச் செல்வதற்கு ரயில் நிலையத்திற்கு வந்தபோதே இந்த மோதல் நடைபெற்றுள்ளதாக பொலீஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

## இனப்பிரச்சினையை ஐ. நா. கொண்டு செல்க

### இந்தியாவிடம் ஈ.பி.ஆர்.எல்.எப். கோரிக்கை

(கொழும்பு)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கிடையே விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாக மத்திய அரசு கருதுமேயானால் பொருத்தமான மாற்றுவழி காணப்பட வேண்டுமேயன்றி சிறிலங்கா அரசின் கைகளில் ஒப்படைப்பது தவறானதாகும் என்று ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் சென்னையில் நடாத்திய தனது இரண்டாவது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேலும் இலங்கைத் தமிழர் எதிர்நோக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபை உட்பட இதர சர்வதேச மன்றங்களில் இலங்கைத் தமிழருக்காக குரலெழுப்ப வேண்டியது இந்தியாவின் பொறுப்பும் கடமையும் ஆகும் என்றும் அங்கு நிறைவேற்றப்பட்ட மற்றொருதீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் திருக்கோணேஸ்வரர் கோவில், திருக்கேதீஸ்வரர் கோவில் போன்றபாடல் பெற்ற தலங்கள் புனித பூமியாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டுமென்றும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டுமென்றும் நிறைவேற்றப்பட்ட வேறு சில தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசிற்கு எதிராக தென்மராட்சியில் பேரணி

(தென்மராட்சி)

பொருளாதாரத்தடையைக் கண்டித்து தென்மராட்சியில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

அரசினால் யாழ். குடாநாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார, போக்குவரத்துத் தடைகளினால் ஏற்பட்டிருக்கும் அவலங்கள், உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு விலை ஏற்றம் மற்றும் பொருளாதார சீரழிவுகளைக் கண்டித்தும், நீக்கக் கோரியும் தென்மராட்சி மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டனப் பேரணி மீசாலைச் சந்தியில் இருந்து இன்று காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகி கண்டி பிரதான வழியூடாக அரசுக்கு எதிரான பலவித கோஷங்களைத் தாங்கிய சுலோகங்களுடன் தென்மராட்சிபிரதேச சபையை வந்தடைந்து அங்கு உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படும். இதில் மாணவர்கள், பொதுமக்கள், வெகுஜன அமைப்பைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் (86)

## ஹெலி நோட்டம்

நேற்று பகல் 11மணியளவில் உலங்குவானூர்தியொன்று அரை மணிநேரமாக மானிப்பாய், இணுவில், கோப்பாய் பகுதிகளில் பறந்து நோட்டமிட்டுச் சென்றது. இதனால் கோப்பாய் - கைதடி வெளியினூடு பயணம் செய்த மக்கள் பெரும் பதற்றமடைந்தனர். (11), (09)

## புலோப்பளைக்கு மாற்றம்

(தென்மராட்சி)

கிளாலி-பூநகரி படகுசேவை நேற்றைய தினத்திலிருந்து கிளாலிக்கு பதில் புலோப்பளையிலிருந்து நடாத்தப்பட்டு வருகிறது.

நேற்றையதினம் பல ஆயிரக்கணக்கான மக்கள் இக்கரையில் இருந்து அக்கரையை சென்றடைந்தனர். இதே வேளை அக்கரையில் இருந்தும் பெருமளவு மக்கள் இக்கரைக்கு வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (86)

## அவசரகால விதிகளின்கீழ் அரசு மனிதஉரிமை மீறல்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் மனித உரிமைகளை மீறி வருகின்றது என கொழும்பு பல்கலைக்கழகம் தனது மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆய்வில் குறிப்பிட்டுள்ளது.

சாதாரண சட்டத்தின் கீழ் எந்த ஒரு நபரையும் குறிப்பிட்ட நேரத்திற்குமேல் தடுத்து வைத்திருக்க முடியாது. ஆனால் அவசரகால சட்ட விதிகளின் கீழ் சிறிலங்கா

(6ஆம் பக்கம் பார்க்க)

## 58 இந்திய மீனவர் கடற்படையால் கைது

(கொழும்பு)

கச்சதீவுக் கடற்பரப்பிலிருந்து சுமார் 58 இந்திய மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் கடந்த சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

மேற்படி கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகுகளை வழிமறித்த சிறிலங்கா கடற்படையினர் 15 படகுகளுடன் இம்மீனவர்களை தம்முடன் இழுத்துச் சென்றுள்ளனர்.

இம்மீனவர்களையும் படகுகளையும் மீட்டுத் தரும்படி

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## தம்பாசிட்டி மீனவர் தொழிலின்றி அவதி

தம்பாசிட்டிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நவாலியில் தங்கியிருக்கும் மீனவக் குடும்பங்கள் மிகுந்த பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்த முகாமில் உள்ளோர் கடற்கரைக்கு மீன் பிடிக்க சென்றபோது இவர்களது வள்ளங்கள் சில விஷமிகளால் திட்டமிட்டு தாக்கப்பட்டு சேதத்துக்குள்ளாக்கப்பட்டதினால் அவர்களின் மீன்பிடித்தொழில் பாதிப்படைந்துள்ளது.

இதனால் இவர்கள் அரசு வழங்கும் நிவாரணப் பொருள்களை நம்பியே தற்பொழுது வாழ்க்கை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது(07)

## வரி விளம்பரம்

பாடல் பதிவு

நீங்கள் விரும்பும் பாடல்களை இப்போது கொம்பக்ட் டிஸ்க் மூலம் பதிவு செய்து பெற்றிட இன்றே வாருங்கள் ஷண் றெக்கோடிங் ஸ்பொட் பஸ்நிலைய வயிரவர்கோவில், அருகாமையில், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

(4068)

**ENGLISH COURSE ENGLISH FOR G.A Q AND DEGREE [ESL]**

Comorehensive integrated Course. 2 Days a week

V. N. KANDASAMY A.I B Part I London Inter. London

87,, திருநெல்வேலி, றோட் (றயில் கடவைக்கு அண்மையில்) கொக்குவில், (4316)


## விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் 19வயதிற்குட்பட்டவர்களுக்கான வருடாந்த கிரிக்கட் போட்டி வெள்ளி 5ஆம் திகதியும் சனி 6ஆம் திகதியும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் 23ஆம் 24ஆம் திகதிகளில் நடைபெற்ற 19வயதிற்குட்பட்ட கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 215 ஓட்டங்களைப் பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மிகவும் சிறப்பாக விளையாடி மொத்தம் 248 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்.மத்திய கல்லூரிதனது இரண்டாவது இனிங்சில் 5விக்கெட் நஷ்டத்திற்கு மொத்தம் 143 ஓட்டங்களைப் பெற்றது. [42]

### குருநகர் பாடும்மீன் வெற்றியீட்டியது

யாழ். வட்ட லியோ கழகத்தினால் கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்துக்கும் குருநகர் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நேற்று முன்தினம் அரியாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் பெனால்டி உதைமூலம் 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

ஆட்டம் ஆரம்பித்து இறுதிவரை இரு கோஷ்டிகளும் கோல் எதுவும் போடாததினால் மத்தியஸ்தரினால் பெனால்டி உதைமூலம் கோல்கள்போடுமாறும் இருகோஷ்டிகளும் பணிக்கப்பட்டது.

(17)

## தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கம் நடாத்தும் ''தமிழ் விழா'' புதன்கிழமை நாளை காலை 9.00 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும்

இத்தமிழ் விழாவிற்கு பிரதம விருந்தினராக திருவாளர் வெ. இளங்குமரன் (பொறுப்பாளர் தமிழீழக் கல்விக் கழகம்) கலந்து கொள்ளுவார்.

(42)

## யாழ்.மாநகர கடைகளுக்கு கேள்விபத்திரம் கோரவில்லை

- வே. பொ. பாலசிங்கம்

முஸ்லிம் மக்களுக்குரிய யாழ் மாநகரக்கடைகளை வழங்குவதற்காக மீளக் கேள்விப்பத்திரங்கள் கோர நடவடிக்கை எடுக்கப்படுவதாக கொழும்புப்பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என யாழ் மாநகர ஆணையாளர் வே. பொ.பாலசிங்கம்அறிவித்துள்ளார்.

கைவிடப்பட்டிருக்கும் முஸ்லிம் மக்களின் சொத்துக்களை விற்பனைசெய்வதற்கு மாநகரசபை நடவடிக்கை எடுத்துவருவதாக கூறப்படுவதில் உண்மை எதுவும் இல்லை அவ்வாறான நடவடிக்கை எதனையும் மாநகரசபை எடுக்கவும் இல்லை. எடுக்க உத்தேசிக்கவும் இல்லைஎனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி

**சுகந்தன் இன்னாசித்தம்பி**

இலங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அதிபர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்கள் 01-03-93 காலை இறைவனடி சேர்ந்தார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச்செலுத்துகின்றோம்.

அன்னாரது பூதவுடல் 03-03-93 புதன்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் கல்லூரி மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும் இவ் அறிவித்தலை மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு, அன்னாரின் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நா. வாமதேவன்
[உப அதிபர்]
விரிவுரையாளர்களும்,
மாணவர்களும்.

(4375)

## தவறிவிட்டது

உழவு இயந்திர ( ட்றக்டர் ) பெட்டிப் புத்தகமும், வேறு சில பத்திரங்களும் புலோப்பளைக்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

த. செல்வராசா

( 4376 )

## 31-ம் நாள் நினைவு அஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 1974 | 1993 |
| — | — |
| 10 | 1 |
| — | — |
| 23 | 31 |

**2-ம் லெப். அசந்தன் (கணையன்)**

(செந்திவேல் ராஜ்குமார்)

தமிழீழத்தின் தலைநகராம் திருமலை
மண்ணிலே செந்தில்வேல் ராஜ்குமாராக
74-10-23-ல் பிறந்தாய்
பள்ளிப்பருவத்திலே துள்ளி விளையாடி
எம் இதயத்தில் குடி இருந்தாய்
பால் வடியும் உன் முகம்
மாறும் பொழுதினிலே
நெஞ்சிலே உரத்தை வைத்து
நேர்மையில் திறத்தைக் காட்டி
வேங்கையில் ஒருவனாகி
வீரம் புரிய சென்றாய்
கணையன் அசந்தன் என்று பெயரும் பெற்றாய்
களங்கள் பலசென்று காவியம் படைத்தாய்
கணையனே.

93-1-31 அன்று உன்னைப் பிரிந்தோம். நாள்தான் 31 போனதே ஒழிய நீயோ எம் இதயத்தில் என்றும் குடியிருப்பாய். 2-3-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சக போராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர்களை கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
பெரியம்மா, சித்திமார், சித்தப்பாமார்,
மாமாமார், மாமிமார், உற்றார்,
உறவினர், நண்பர்கள், உன்சக போராளிகள்

20 B,
நாவற்குழி. (சி, 6120)

## ஸ்பிரிங்வெலி தோட்டத்தில் 2000 பேர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

பதுளை ஸ்பிரிங்வெலிதோட்டத்தைச் சேர்ந்த சுமார் 2000 தோட்டத் தொழிலாளர் கடந்த 26-ம் திகதி முதல்வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

உத்தியோகத்தர் ஒருவருக்கும் ஸ்பிரிங்வெலி தோட்டத்தைச் சேர்ந்த 7வது டிவிஷனில் உள்ள ஒரு பெண் தொழிலாளிக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையை அடுத்தே இந்த வேலை நிறுத்தம் நடைபெறுகின்றது. இப்பிரச்சினை தொடர்பாக தோட்ட நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென்றும்- ஸ்பிரிங்வெலி தோட்டத்தைச் சேர்ந்த 7வது டிவிஷன் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும் விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர். எம். கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

### பெற்றுக் கொள்ளவும்

அராலி வடக்கைச் சேர்ந்த மனோன்மணி சிவரத்தினம் என்பவருடைய அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## 30 வீத சம்பள உயர்வு ஆசிரியர்களுக்கு கிடைக்கும்

(கொழும்பு)

கடந்த வரவு செலவுத்திட்டத்தின் போது அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 30 சத வீத சம்பள அதிகரிப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கும் உடனடியாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பளஅதிகரிப்பை இவர்களுக்கு உடனடியாக வழங்குமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அதிகாரிகளைப் பணித்துள்ளார். ஜனாதிபதியின் இப்பணிப்புரையை அடுத்து கல்விஉயர் கல்வி அமைச்சு ஜனவரி மாதத்திலிருந்து இச் சம்பள அதிகரிப்பை வழங்கவுள்ளது.

### அமைச்சரவைத் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்க சேவை உறுப்பினர்களுக்கு உள்ள சகல வசதிகளையும், சலுகைகளையும் மாகாண பொதுச் சேவை உறுப்பினர்களுக்கும் வழங்குவது என்று அமைச்சரவை அண்மையில் முடிவு செய்துள்ளது.

## நினைவு கூருகின்றோம்...

**1993-03-02**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

செல்லத்தம்பி சுப்பிரமணியம் (வந்தாறுமூலை - மட்டு)

மலையகம் - பொகவந்தலாவைப் பகுதியிற் சிறிலங்கா காடையர்களினாற் வெட்டிக் கொல்லப்பட்ட 'கிறீன்வில்' தோட்டக் கங்காணியான தமிழ்ப் பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு திருமலை - மணியரசன்குளம் பகுதியில் - மாட்டுவண்டியில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

அப்துல்லா (ஆ. அருட்பிரகாசம் - கந்தளாய் - திருமலை)

1989 ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

லெப். குகேந்திரன் (குருகுலசிங்கம் அரசரத்தினம் -ஆசிகுளம் - வவுனியா

இதே பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய

மேஜர் கமல் (அருணாசலம்தேவர் சுந்தரராஜன் (-4ஆம் வாய்க்கால் - கிளிநொச்சி

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எமைப் பிரிந்த

மென்டிஸ் (குணம் சந்திரசேகரம் - அளவெட்டி வடக்கு - யாழ்)

1992 ஆம் ஆண்டு,போராளிகளுக்கான பாதுகாப்பகழி அமைக்கவென 'சிலிப்பர்' கட்டைகளை ஏற்றிவரும் போது யாழ் - சாவகச்சேரி, கைதடிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உழவுயந்திர விபத்தில் எமைப்பிரிந்த

நாட்டுப்பற்றாளரான- (மாணவர் இயக்க உறுப்பினர்)

சத்தியநாதன் சதீஸ்வரன் (கைதடி வடக்கு சாவகச்சேரி - யாழ்)

மட்டு - குடும்பிமலை முகாமை அண்டிய பகுதிகளில் தேடுதல் வேட்டையிலீடுபட்ட சிறிலங்கா இராணுவத்தாற் கைதாகி, சித்திரவதை செய்யப்பட்டு, சுட்டும், வெட்டியுங் கொல்லப்பட்ட 42 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6113)

# 5320 நாட்கள் அவசரகால ஆட்சி கின்னஸில் பதிய கூடியசாதனை இது

## தமிழ் எம். பி. சபையில் வர்ணிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரம் பெற்றபின் 5320 நாட்கள் அவசரகால நிலையில் ஆட்சிநடத்தி கின்னஸ் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஒருவர் அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய அவர் சிறிலங்கா சுதந்திரம் பெற்றபின்னர் 45 வருடங்களைப்பூர்த்தி செய்துவிட்டது. இந்த 45 வருட காலத்தில் சுமார் 15 வருடங்களாக நாட்டை அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சி செய்திருக்கிறோம். ஐக்கிய தேசியக்கட்சி இந்நாட்டை 29வருடங்கள் ஆட்சி செய்துள்ளது. தொடர்ந்தும் ஆட்சிசெய்கிறது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், அதன் கூட்டணிக் கட்சிகளும் நாட்டை சுமார் 16 வருடங்கள் ஆட்சி செய்திருக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதன் 16வருட ஆட்சிக்காலத்தில் 5 வருடங்களுக்கும் அதிகமான காலத்தை அவசரகால சட்டத்தின் கீழேயே நிர்வகித்தது. மறுவார்த்தையில் சொல்வதானால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதன் ஆட்சிக் காலத்தின் மூன்றில் ஒரு பகுதியை அவசரகாலச் சட்டத்தின் கீழ் நிர்வகித்தது எனலாம்.

அதே போலவே ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் 29 வருட ஆட்சிக் காலத்தில் சுமார் 10 வருட காலத்தை அவசர காலச்சட்டத்தின் கீழ் நிர்வகித்திருக்கிறது இதை மறுவார்த்தையில் கூறுவதானால் ஐ. தே. கட்சி அதன் ஆட்சிக் காலத்தில் மூன்றில் ஒரு பகுதியை அவசரகாலத்தின் கீழேயே நிர்வகித்திருக்கிறது எனலாம்.

மொத்தமாக சுதந்திரத்தின் பின்னர் 5320 நாட்கள் இந்த நாடு அவசரகாலச் சட்டத்தின் கீழ் இருந்திருக்கிறது. அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணையை 175 தடவைகள் இதுவரைபாராளுமன்றத்தில் விவாதித்ததன் மூலமாக நாம் சரித்திரமொன்றையும் உருவாக்கியிருக்கின்றோம். உலகசாதனை பதியப்படும் கின்னஸ் புத்தகத்தில் இது குறிக்கப்பட வேண்டும். இதற்காக நாம் பெருமைப்படவும் வேண்டும்.

இவற்றுக்கு மேலாக ''அவசர கால ஜனநாயகம்'' என்ற புதிய அரசியல் முறையையும் நாம் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். கடந்த 15 வருட காலமாக இந்த அவசரகால ஜனநாயகம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

பிரெஞ்சுஜனாதிபதிடிகோல் கூட தனது நாட்டை 5மாத காலத்துக்குத்தான் அவசர காலச் சட்டத்தின்கீழ் ஆட்சி செய்தார். எமது அயல் நாடான இந்தியாவிலேயே இந்திரா காந்தி இரண்டு வருடங்கள்தான் அவசர கால நிலையில் ஆட்சி நடத்தினார்.

கடந்த 15 வருட காலத்தில் இலங்கையில் சுமார் 70 ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 75 வீதமானவர்கள் வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்களே என்றார்.

# நீர்கொழும்பில் 17 தமிழர் பொலீசாரால் கைது

(கொழும்பு)

தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து சென்று நீர்கொழும்பில் தங்கியிருந்த 17 தமிழ் வாலிபர்கள் கடந்த 25ஆம் திகதி பொலீசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்களது பெயரை பொலீசில் பதிவு செய்யாமல் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினர் என்றும் இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலீசார் நள்ளிரவு நடத்திய திடீர் முற்றுகையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் கைதுசெய்யப்படும் போது அடையாள அட்டைகளோ வேறு எந்த ஆவணங்களோ இவர்களிடம் இருக்கவில்லை என்றும் இவர்கள் மாதம் 2000 ரூபா முதல் 3000 ரூபா வரை வாடகை செலுத்தி வந்தனர் என்றும் பொலீசார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா - கொழும்பு ரயிலில்

# மோசடியும் பணப் பறிப்பும் தொடர்ந்தும் நடக்கிறது

(கொழும்பு)

கொழும்பிலிருந்துபுடைவை வகைகளை வாங்கிக் கொண்டு கிளிநொச்சிப் பகுதியில் வியாபாரம் செய்து வரும் இளைஞர் ஒருவர் வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி ரயிலில் செல்லும் போது இரண்டு இளைஞர்களால் மிரட்டி கடத்திச் செல்லப்பட்டு 12 ஆயிரம் ரூபா பணமும் பொருள்களும் பறித்துச் செல்லப்பட்ட சோதனை மிக்க வேதனையான சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: கொழும்பு நோக்கி ரயில் சென்று கொண்டிருக்கையில் மதவாச்சியைத் தாண்டியதும் இரண்டு இளைஞர்கள் இவரை அணுகி தங்களை இரகசியப் பொலிசார் என அறிமுகப் படுத்தி அவரிடமிருந்த அடையாள அட்டை மற்றும் ஏனைய பொருள்களையும் மிரட்டும் தோரணையில் கேட்டனர். ரயில் மருதானை நிலையத்தை அடைந்ததும் இவருடன் அந்த இரு இளைஞர்களும் கூடவே இறங்கி விசாரணைக்காக காக பொலீஸ் நிலையம் செல்ல வேண்டும் என்று கூறி ஆட்டோவில் அழைத்துச் சென்றனர்.

கிருலப்பனையை அடைந்ததும் சனநடமாட்டம் இல்லாத பகுதியில்வைத்துஆட்டோவை நிறுத்தி தனிமையான ஓர் இடத்திற்குஅழைத்துச்சென்று ஒருவர் குரல்வளையைப் பிடித்துக் கொள்ள மற்றவர் அவரிடமிருந்த 12 ஆயிரம் ரூபா பணத்தையும், மற்றும் விரலில் அணிந்திருந்த மோதிரம் என்பனவற்றையும் பறித்துக் கொண்டு அவரை மூர்க்கத்தனமாகத் தாக்கி கற்களால் எறிந்து விரட்டி விட்டனர்.

இந்த வேதனையை பொலீசாருக்கு புகார் செய்யச்சென்ற போது பொலீசார் பதிய மறுத்து விட்டனராம். ஆட்களைக் கண்டால் பொலீசில் பிடித்துக் கொடு அல்லது தொலைபேசி மூலம் தகவல் தா எனக் கூறி தொலைபேசி எண்ணைக் கொடுத்தனராம்.

# இராணுவ ஆஸ்பத்திரிக்கு மருந்து வழங்க பணிப்பு

(கொழும்பு)

வெலிஓயா பகுதியில் (மணலாறு) இருக்கும் இராணுவ முகாமில் உள்ள வைத்திய சாலைக்கு தேவையான மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ வசதிகளை உடனடியாக அளிக்க வேண்டும் என்று சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இரண்டாயிரம் இராணுவத்தினரைக் கொண்ட இம் முகாமை அண்மையில் சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர் தேவையான மருந்துப் பொருள்களை உடனடியாக வழங்கும்படி தமது அமைச்சு அதிகாரிகளுக்குப் பணித்ததோடு, இப்பிரதேசத்தில் கடமையாற்றும் டாக்டர்கள் இராணுவ முகாமின் தேவைகள் பற்றி விசேட கவனம் செலுத்தும்படியும் கேட்டுக் கொண்டார்.

# பிரேமாவின் சகோதரனுக்கு ஆட்கடத்தலில் பங்கு

## - சுதந்திர கட்சி எம். பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா டக்ளஸ் தேவானந்தாவை சகோதரர் என்கிறார் இந்தச் சகோதரர்களோ ஆட்களை கடத்துகிறார்கள் கப்பம்பெறுகிறார்கள் இவர்கள் குறித்து யாரிடம் முறையிட்டும் பயனில்லை என்று சுதந்திரக் கட்சி எம். பி. யான நிமல் சிறிபால டி. சில்வா அண்மையில் பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஈ. பி. டி. பி அமைப்பு பார்க் வீதியில் சித்திரவதைக் கூடம் ஒன்றையும் ரிமாண்ட் சாலையையும் வைத்திருக்கிறது. அங்கே தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

ஜனாதிபதி ரணசிங்கபிரேமதாசா அண்மையில் டக்ளஸ் தேவானந்தா, எம். எச். எம் அஷ்ரப் ஆகியோரை தம்பிமார் என அழைத்தார் என்பது தெரிந்ததே ஈ. பி. டி. பி. யின்பேரில் பல குற்றச்சாட்டுக்களை சுமத்திய நிமல் சிறிபால டி. சில்வா டக்ளஸ் தேவானந்தாவின் பெயரை பலதடவைகள் குறிப்பிட்டு விமர்சனம் செய்தார்.

இதற்கு பதிலளித்த தமிழ் எம். பி ஒருவர் சிறுபான்மையினரையே ஜனாதிபதி தம்பி என அழைத்தார் டக்ளஸ் தேவானந்தாவையும், அஸ்ரப்பையும் தம்பிமாராக அவர் நினைக்கவில்லை என்றார் அத்துடன்புலிகளை ஒழிப்பது என்றபேரில் வேறு அமைப்புக்களுக்கு ஆயுதம் கொடுப்பது நல்லதல்ல என்றார்.

# இணைந்த பல்கலை அனுமதி விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளின் 1992ஆம் கல்வி ஆண்டிற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 1990 ஓகஸ்ட், 1991 ஏப்ரலில் நடைபெற்ற விசேட க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்து நான்காவது பாடத்தில் 25 விகிதத்திற்கு குறையாத புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் நான்கு பாடங்களிலும் 180புள்ளிகளுக்கு குறையாமல் பெற்றிருக்க வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது.

# கிளிநொச்சியில் காலரா? சுகாதாரப் பகுதி அறிவிப்பு

கிளிநொச்சியில் காலரா மற்றும் வாந்திபேதி நோய்கள் பரவும் அபாயம் தோன்றியிருப்பதாக சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இராமநாதபுரம், வட்டக்கச்சி மற்றும் வர்ணபுரம்ஆகிய பகுதிகள் சுகாதார பகுதியினரால் காலராப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாகவும், இதனால் இப்பகுதிகளுக்குள் பிரவேசிப்பதும், அங்கிருந்து வெளியேறுவதும் தவிர்க்கப்பட வேண்டுமெனவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

# அறிக்கை வெளியானபின்பே அருத்தநிலைப்பாடு ஆராய்வு

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை வெளியான பின்னரே தமிழ்க் கட்சிகள் அவற்றின் அடுத்த நிலைப்பாடு குறித்து தீர்மானிக்கும் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## பதவி உயர்வு

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கடமையாற்றி வரும் திரு.க. தங்கராஜா அண்மையில் தரம் ஒன்று அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவ் வித்தியாலய மாணவியான செ. சுதர்சினி யாழ் தெற்கு கொத்தணிப் பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப்பெற்றமைக்காக தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால் பாராட்டுப் பத்திரமும் பரிசிலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டும் இருக்கின்றார்.

## அறிவித்தல்

வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை முதலிய கோயில் ஆலய பரிபாலன சபையினரால் 7-03-93 நடாத்தப் படவிருந்த இருநாடகங்கள்

1. களத்தில் காத்தான்
2. அவலங்கள்

25-4-93 நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(4373) — ஆலயபரிபாலன சபையினர்

## வீர அஞ்சலி



**2-ம் லெப். முரளிதாஸ்**
(கிருஷ்ணபிள்ளை கமலநாதன்)

27-2-1993 அன்று திகினி வெட்டையில் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்தார்.

விடுதலைப் பயிர் காத்திடவே
வீரனாய் மண்ணில் நிமிர்ந்தாய்
பாசத்தை எங்கள் மீது
பாலெனப் பொழிந்து நின்றாய்
உயிர்மலர் உருகுது தம்பீ!
உன்பிரிவெனும் சேதி கண்டு
பாதையில் தொடர்ந்து நடந்து - உன்
பணியினை நாங்கள் சுமப்போம்!

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

வீர அஞ்சலிகளுடன்,
ந. சிவகுமார்
சி. ஆதிலட்சுமி

(சி-6117)

மருந்துப் பொருள்கள்

## இறக்குமதியில் மோசடி தலைவர் பதவி நீக்கம்

(கொழும்பு)

மருந்து இறக்குமதியில் நடைபெற்ற மோசடிகளைத் தொடர்ந்து இலங்கை மருந்தக் கூட்டுத்தாபனத் தலைவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

அண்மைக் காலமாக மருந்தக் கூட்டுத்தாபனம் மருந்து இறக்குமதியில் பல மோசடிகளைச் செய்துள்ளதாக கொழும்பு பத்திரிகைகளில் காரசாரமாக எழுதப்பட்டதைத் தொடர்ந்தே லக்ஷ்மன் வணசிங்க பதவி நீக்கம் செய்யப்பட்டார் எனத் தெரிய வருகிறது.

தற்போது இவரது இடத்திற்கு வாஸ் குணவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார். இவர்முன்னர் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகக் கடமையாற்றியவர் ஆவார்.


**சனிமாற்றம்**

05-03-1993 இல் நிகழும்

சனிமாற்றம் உங்களுக்கு நன்மைபயக்குமா?
பன்னிரு ராசிகளுக்கும் ஒரே புத்தகமாக
விற்பனையாகின்றது.

விலை ரூபா - **12.00 மட்டுமே**

விபரங்கட்கு:- திருக்கணித நிலையம் மட்டுவில், சாவகச்சேரி.

(3382)


### 5-ம் மாத நினைவஞ்சலி

வீரப் பிறப்பு 2 - 02 - 1974



வீரச் சாவு 2 - 10 - 1992

**வீரவேங்கை நகீரன்**

[சவிரிமுத்து அலெக்சான்டர்]

தானைத் தலைவனின் பாதையிலே
தமிழீழம் அமைத்திட களம் புகுந்தாய்
கட்டைக்காட்டில் சமர் புரிந்தாய் - நகீரா
உனதுயிரை தமிழ் மண்ணுக்கு அர்ப்பணித்தாய்.

கரம்பொன் தெற்கு, மெலிஞ்சு முனை, ஊர்காவற்றுறை. — அம்மா, அப்பா, அண்ணாமார், அக்காமார்.

(4358)

மாணவர்

### உணவுமுத்திரைக்கு பொருள் விநியோகம்

மாணவர் மதிய உணவு முத்திரைக்கான பொருள்கள் யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள சகல ப. நோ. கூ. சங்கக்கடைகளிலும் பெறக்கூடியதாக இம்மாதம் தொடக்கம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ். மாநகரசபை ப. நோ. கூ சங்கத் தலைவர் திரு. சூ. சிறில் அவர்கள் தெரிவித்துள்ளார்.

27-02-93 சனிக்கிழமை யா. மா. ந. ப. நோ. கூ. சங்கப் பணிமனையில் நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் பொதுச்சபை உறுப்பினர் ஒருவர் மாணவர் மதிய உணவு முத்திரைக்கானபொருள்கள் சில ப. நோ. கூ.சங்கக் கடைகளில் பெறுவதற்கு அதிகம் பேர்காத்து நிற்பதாகவும், சில ப. நோ. கூ. சங்கக்கடைகளில் ஒரு சிலரே பெறக்கூடியதாக இருப்பதாகவும் இதனை சகல சங்கங்களுக்கும் சமமாக வழங்கினால் நேரம் மிச்சம் ஏற்படும் எனவும் தெரிவித்தபோதே அவர் இவ்வாக்குறுதியை வழங்கினார். (17)

### ஆளும் கட்சி சார்பு வேட்பாளர் பின்னணியில்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளரான டி. டபிள்யூ அபயக்கோன் 996 வாக்குகள் பெற்று முன்னிலையில் இருப்பதாக தெரியவருகின்றது இவரோடு தேர்தலில் போட்டியிட்ட அரசாங்கக்கட்சி ஆதரவாளரும் சட்டமா அதிபரின் சகோதரருமான ரமினிமாரப்பினடி 626 வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார் இவை கொழும்பு ஹல்ஸ்டோப் சட்ட நூல் நிலையத்தில் பதிவான வாக்குகள் மட்டுமே எனினும் வெளிமாவட்டங்களிலும் அபயக்கோன் முன்னணியில் இருப்பதாக கூறப்படுகின்றது.

### இலங்கையர் நாடு கடத்தப்பட்டார்

(கொழும்பு)

போதைவஸ்து கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் போர்த்துக்கலில் சிறைத்தண்டனை அனுபவித்து அங்கிருந்து நாடுகடத்தப்பட்ட இலங்கையர் ஒருவர் நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

மகிழடித்தீவு படுகொலை

## சிவில் நீதிமன்றத்தில் 23 பேர் மீது வழக்கு

[கொழும்பு]

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் 23 இராணுவத்தினர் அடுத்த வாரம் சிவில் நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கடந்த வியாழனன்றுதெரிவித்தன.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட இந்த 23 இராணுவத்தினரும் கடந்த வருடம் ஆகஸ்ட் 9 ஆம் திகதி மகிழடித்தீவு என்ற கிராமத்தில் நடந்த படுகொலைகள் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டவர்களாவர்.

இப்படுகொலைகள் வடபகுதியில் உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட 9 இராணுவத்தினர் தீவகப் பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கொக்கட்டிச்சோலை என்ற இடத்தில் 67 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இராணுவ நீதிமன்றத்தினால் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட 20 இராணுவத்தினர் விசாரிக்கப்பட்டு கடந்த அக்டோபர் நிரபராதிகள் என விடுதலை செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து சிவிலியன் நீதிமன்றத்தின் முன்னிலையில் இராணுவத்தினர் ஆஜர் செய்யப்பட வேண்டுமென கோரப்பட்டதாகவும், அதனாலேயே முதன்முதலாக இம்முறை இந்த 23 இராணுவத்தினரும் சிவில் நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## சகல பல்கலைக்கழகங்களும் மார்ச் 8 முதல் செயற்படும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் மார்ச் 8 ஆம் திகதியில் இருந்து செயற்படவுள்ளதாக தெரிய வருகின்றது. இவ்வாரம் புதிய தவணைக்காக சகல பீடங்களும் திறக்கப்படும் எனவும் சிறிஜயவர்த்தன புரத்தில் 1500 புதிய மாணவர்கள் இவ்வாரம் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் தெரிய வருகின்றது.

## யுத்தத்தினால் தமிழ்மக்கள் மிகவும் பாதிப்படைகின்றனர்

- பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு முப்படைகள் மூலம் நடாத்தும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதென்றால் இதை வெளிப்படையாகவே சொல்லிவிடவேண்டும் என அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் எம். பி. ஒருவர் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் வடக்கு-கிழக்கில் தற்போது அரசு மேற்கொண்டு வரும் யுத்தத்தினால் பொதுமக்களே பெருமளவில் கொல்லப்படுகிறார்கள். இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும்.

கிளாலி கடலேரியை புலிகளால் பத்து நிமிடங்களில் கடந்து விட முடியும். அவர்கள் சக்திமிக்க பல இயந்திரங்களை பொருத்தியே கிளாலியில் படகை ஓட்டுகிறார்கள். ஆனால்பொதுமக்களோ 8 குதிரைவலு கொண்ட இயந்திரங்களைக் கொண்ட படகுகள் மூலமே பயணம் செய்கிறார்கள். இவர்களின் பயணத்துக்கு 3.00 மணி நேரம் பிடிக்கிறது.

கிளாலியால் பயணம் செய்யும் நூற்றுக்கணக்கான பயணிகள் படையினரின் தாக்குதல்களினால் பலியாகிறார்கள். கிளாலியிலே மூழ்கடிக்கப்படும் சகல படகுகளும் புலிகளின் படகுகள் என்று எளிதாகஅரசு கூறிவிடுகிறது. யாழ்ப்பாண மக்கள் தங்களது சகல தேவைகளுக்கும் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு பயணத்துக்கு பாதுகாப்பான பாதையில்லை வடக்கிலே உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

மக்கள் மனோவியாதியால் பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். யாருக்கு எதிரான போர் இது? யார் கொலை செய்யப்படுகிறார்கள்? கிளாலியில் பயணம் செய்யும் பல்கலைக்கழக மாணவிகள் கூட கொலை செய்யப்பட்டார்கள் அவர்களும் புலிகள் என்றே அரசாங்கம் கூறுகிறது.


தமிழ் மக்களும் இந்தநாட்டு மக்களே அவர்களுக்கும் சிங்கள மக்களுக்கு உள்ளதைப் போன்று சகல உரிமைகளும் இருக்க வேண்டும்.

கடந்த 10 வருடங்களாக போரை நீடிப்பதில் அக்கறை காட்டப்பட்டதே தவிர இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசு கரிசனையை வெளிப்படுத்திச் செயற்படுவதாயில்லை.

90ஜூனில் மீண்டும் போர் ஆரம்பமானதன் பின்னர் ஆயிரக்கணக்கானவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் புலிகள் இல்லை.

விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் பலர் குடும்பத் தலைவர்கள். இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் அக்குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

# 46-ம் நாள் நினைவஞ்சலி



தன்நலம் கருதாத்தளபதி
தமிழீழ தாகத்தோடு
தம்நாடு நோக்கிவர
தரணியேதன் ஆதிக்கம்
தான் என்ற வெறியால்
இந்தியும் செயற்பட....
தமிழ்மானம் மறவாத்
தளபதி சகவீரர்களோடு
தமிழீழ மானம் காத்தான்
தாய்மொழியின் மானம்
காத்தான்
தன்மானத்தினையும்
காத்தே வென்றான்

மூத்த தளபதி **கேணல் கிட்டு**

16. 01. 93 அன்று வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு அவர்களுக்கும் அவரோடு வீரகாவியமான ஏனைய வேங்கைகளுக்கும் எமது வீரவணக்கங்கள்.

**இளந்தென்றல்** படப்பிடிப்பாளர்
**கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-6116)

சிந்தனைக்கு

நமக்கு முன் அந்த இருட்டுப் பாதையில் ஆயிரக்கணக் கானவர்கள் சென்றுள்ளனர். ஆனால் ஒருவராவது திரும்பி வந்து அந்தப் பாதை எத்தகையது என்று நம்மிடம் சொல்லவில்லையே.

— நமார் தய்யாம்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02- 03- 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## தட்டிக்கழிப்பு

இனப் பிரச்சினைக்கான தீர்வைக் கூறுங்கள் பிரச்சினையைத் தீர்த்துவைத்து விடுகின்றோம். சிறிலங்கா ஜனாதிபதி பாராளுமன்றத் தெரிவுக் குழு 1991ஆம் ஆண்டின் மத்தியில் உருவாகிய போது இது போன்றே குறிப்பிட்டார். ஆனால், சுமார் ஒன்றரை வருடங்களின் பின் இப்பொழுதும் சிறிலங்கா ஜனாதிபதி இவ்வாறே கூறுகின்றார். ஆனால், பிரச்சினைக்குரிய தீர்வுதான் கிட்டுவதாக இல்லை.

அண்மையில் ''எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளியாரின் உதவி தேவையில்லை, தெரிவுக்குழு சிந்தித்துச் செயற்பட்டால், ஆறு மாதங்களுக்கு இடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்'' எனக் குறிப்பிட்டுள்ள சிறிலங்கா ஜனாதிபதி ''வடக்கு, கிழக்கில் இயங்கும் தமிழ், முஸ்லிம் இயக்கங்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அச்சமின்றி வாழும் வகையிலான இனப்பிரச்சினைக்கு தீர்வுத் திட்டம் ஒன்றினை தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்க வேண்டும்'' என இருதினங்களுக்கு முன் அம்பாறையில் வைத்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இக் கோரிக்கைகளும் எதிர்பார்க்கைகளும் வேடிக்கைத் தனமானதும், ஏமாற்றுத் தனமானதுமாகும். இனப்பிரச்சினைத் தீர்விற்கு தெரிவுக்குழுவை சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது எனக் கூறுவது நியாயமான ஒரு ஜனாதிபதியின் பேச்சல்ல தெரிவுக் குழுவில் பெரும்பான்மை அங்கத்தவர்களைக்கொண்டுள்ள ஐ. தே. கட்சியின் தலைவர் ஆர். பிரேமதாசா தெரிவுக் குழு சிந்தித்து செயற்பட்டால் ... எனக் கூறுவது இனப்பிரச்சினை தீர்வில் ஐ. தே. கட்சிக்குள்ள பங்கைத் தட்டிக் கழிக்கும் நோக்கம் கொண்டதாகும்.

உண்மையில், பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் திரு. பிரேமதாசா நம்பிக்கை வைத்திருப்பாரேயானால் ஐக்கிய தேசியக் கட்சியும் தனது பங்களிப்பை தெரிவுக் குழுவிற்கு ஆற்ற முன் வர வேண்டும். அப்பொழுதே தெரிவுக்குழு சிந்தித்து செயல் ஆற்ற முடியும். இதைவிடுத்து, ஐ. தே. கட்சி பிரச்சினைத் தீர்வை பற்றிச் சிந்திக்காமல் இருந்து கொண்டு ஏனையவர்களை சிந்திக்குமாறு கோருவது ஒருவகை அரசியல் பம்மாத்தே ஆகும்.

அடுத்ததாக தீர்வுத் திட்டம் ஒன்றை தமிழ், முஸ்லிம் இயக்கங்கள் முன் வைக்க வேண்டும் என்ற திரு. பிரேமதாசாவின் கோரிக்கை நடைமுறையில் பொருத்தப்பாடு அற்றதாகும். ஏனெனில் ஏற்கனவே இவர்களின் தீர்வுத் திட்டங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. அத்தோடு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இன்றைய நிலை என்ன என்ற கேள்வியையும் இது எழுப்புகின்றது. தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை விரைவில் வெளியாகும் எனத் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கையில், தீர்வுத் திட்டத்தை சமர்ப்பியுங்கள் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளதே இவ்வாறான கேள்வி எழுப்புவதற்குக் காரணமாகும்.

இவை யாவற்றிற்கும் மேலாக இத்தீவில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த இனங்களிடையே அமைதியின்மையும் வன்முறையும் ஏற்படவும் இரத்தம் பெருக்கெடுத்தோடவும் காரணமாக இருந்தவர்கள் பிரேமதாசா போன்ற அரசியல்வாதிகளே. இவர்கள் இன்று பிரச்சினைக்கு தீர்வை மக்களிடம் கோருவதென்பது தமது கடந்தகால தவறை மூடி மறைத்து தம்மை பரிசுத்தமானவர்களாகக் காட்டிக் கொள்ளும் ஒருவகை முயற்சியேயாகும்.

இந்நிலையில் பிரேமதாசாவின் இக் கோரிக்கைகளும், அறிவிப்புக்களும் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வைக் கொண்டு வரப்போவதில்லை. பிரச்சினையை தீர்த்து வைக்க அரசு விரும்பினாலேயே தீர்வு ஒன்று ஏற்பட வாய்ப்பு ஏற்படும். ஆனால் அதனை பிரேமதாசா போன்ற பேரினவாத சிந்தனை கொண்ட அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

# மத்திய அரசும் தமிழக அரசும் இன்னும் எத்தனைநாள் நீடிக்குமோ?

## கருணாநிதி கேள்வி

[சென்னை]

டெல்லி அரசு இன்னும் எத்தனை மாதமோ? தமிழக அரசு இன்னும் எத்தனை வாரமோ? தெரியாது. இது வாரக் கணக்கில்தான் இருக்கிறது. மேலும் கொஞ்சநாள் நீடித்தால் அது அவர்களுக்கு கிடைக்கும் போனஸ் ஆகத்தான் இருக்கும். இவ்வாறு தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி அண்மையில் வேலூரில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போது குறிப்பிட்டார். அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:

ரேஷன் கடையில் அரிசி விலை உயர்வைக் கண்டித்து காங்கிரஸ்காரர்கள் போராட்டம் நடத்துகின்றனர். இதற்கு நரசிம்மராவ்தான் காரணம் என்று கூறி அ. தி. மு. க வினர் ரயில் மறியல் போராட்டம் நடத்துகின்றனர். அதாவது மத்திய அரசும் போராட்டம் செய்கிறது. அரிசி விலையைக் குறைக்க வேண்டிய மாநில அரசும் ரயில்மறியல் போராட்டம் செய்கிறது. அப்படியானால் அரிசி விலை உயர்வுக்குக் காரணம் அரிசி வாங்கச் செல்லும் தாய்மார்களா? அல்லது ரேஷன்கடை ஊழியர்களா? யார் காரணம்? இந்தப் போராட்டங்களுக்கு காரணம் கூட்டணி குழப்பம்தான். அ. தி. மு. க விற்கும் காங்கிரஸாருக்குமிடையேயுள்ள தகராறைத் தீர்த்துக் கொள்ளத்தான் ரயில் மறியல் போராட்டம்.

ஆனால் ஆளும் கட்சி ரயில் மறியல் போராட்டம் நடத்தினால் எதிர்க்கட்சிகள் அதனைப் பின்பற்ற எவ்வளவு நாள் வேண்டும். நீங்கள் ரயில் மறியல் செய்தால் மாலையில் ரயில் ஓடுகிறது. நாங்கள் அத்தகைய போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினால் ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்திற்கும் ரயில் ஓட முடியா நிலை ஏற்படும்.

இன்று இந்தக்கூட்டணித்தகராறுக்கான காரணம் என்ன? சுப்பிரமணிய சுவாமி ஜெயலலிதா மீது ஒரு புகார் கொடுத்துள்ளார். அந்தப் புகார் இவர் எம். எல். ஏயாக இருப்பதற்கு கூட தகுதி இல்லை என்று கூறும் புகார். அது கவர்னரிடத்திலேயே இருக்கிறது கொடுத்து நான்கு மாதங்கள் ஆகின்றது அதனை இன்னமும் அவர் தேர்தல் கமிஷனுக்கு அனுப்பவில்லை. அந்தப் புகாரின் அடிப்படையில் பதவிக்கு ஆபத்து வராமல் இருக்க உத்தரவாதம் தரவேண்டும் என்று ஜெயலலிதா கேட்கின்றார் இதை ஏற்க நரசிம்மராவினால் முடியவில்லை காரணம் நேர்மையின் அடிப்படையில் அல்ல நிலைமையின் அடிப்படையில் நீதிமன்றத்தில் இந்தப் புகாரை அனுப்பித்தான் தீரவேண்டும் என்று தீர்ப்பு வந்து விட்டால் நரசிம்மராவ் அல்ல அவரது பாட்டனார் வந்தாலும் கூட தடுத்து நிறுத்த முடியாது அந்தப் பிரச்சினை தான் இன்று முற்றி இருக்கின்றது.

இன்னும் 3 மாதமோ 4மாதமோ அதற்குள் சுருட்டவேண்டியதை சுருட்ட வேண்டும் என்று ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொள்கின்றனர் என்றும் கருணாநிதி மேலும் குறிப்பிட்டார்.

## கருணாநிதியின் மீது மற்றொரு மனு தாக்கல்

(சென்னை)

ஜெயலலிதாவின் புகழுக்கு களங்கம் ஏற்படும் வகையில் அரசியல் உள்நோக்கம்உடைய கருணாநிதி பிரசாரத்தில் ஈடுபட்டு இருப்பதாகவும், இதனால் முதல்வரின் மனோநிலை பாதிக்கப்படுவதாகவும் எனவே கிரிமினல் சட்டப்படி கருணாநிதி மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறும் மனுவொன்று சென்னை நீதிமன்றத்தில் தமிழக அரச வழக்கறிஞர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேபோல தி.மு.க. தலைவர் கருணாநிதி கலந்து கொண்டு பேசிய அதே கூட்டத்தில் தி.மு.க பேச்சாளர்களான வெற்றி கொண்டான் மைனர் மோசஸ் ஆகியோரும் கலந்து கொண்டு முதல்வருக்கு அவதூறு ஏற்படும் வகையில் பேசி இருப்பதாகக்கூறி அவர்கள் மீது தனித்தனியாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்று சுட்டிக் காட்டியமைக்காக கருணாநிதி மீது ஏற்கனவே அவதூறு வழக்கு சென்னை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

## சாதனை

(லண்டன்)

அவுஸ்திரேலிய கிரிக்கட் அணித்தலைவர்அலன்போடர் துடுப்பாட்டத்தில் உலக சாதனை ஒன்றைநிலைநாட்டியுள்ளார். ஆகக்கூடிய ஓட்டங்களை இதுவரை தனதாக்கிய முன்னாள் இந்திய துடுப்பாட்டக்காரர் சுனில் கவஸ்கர் ஆவர்.

இவரின் ஓட்டம் 10, 123 ஆகும். இதனை அலன் போடர் நியூலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட்போட்டியில் 88 ஓட்டங்களை பெற்றதின் மூலம் முறியடித்துள்ளார்.

## பேரணியை தடைசெய்ய அரசு வன்முறைப்பிரயோகம்

-பாரதீய ஜனதா குற்றச்சாட்டு

(டில்லி)

பேரணியைத் தடைசெய்வதற்காக அரசு அளவுக்கு அதிகமான விதத்தில் பலப் பிரயோகத்தில் ஈடுபட்டதாக பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு குற்றம் சாட்டியுள்ளது.

புதுடில்லியில் கடந்த சனிக்கிழமைநடைபெற்ற இக்குழுக் கூட்டத்தில் சட்ட அங்கீகாரம் இன்றிப் பலர் கைது செய்யப்பட்டதாகவும், பெருமளவிலான மக்கள் இன்னலுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## பிலிப்பைன்ஸில் குண்டு வெடிப்பு

பிலிப்பைன்ஸ் விமான நிலையமொன்றில் நேற்றுமுன் தினம்இடம்பெற்றகுண்டுவெடிப்புசம்பவமொன்றில்இருபத்து மூன்றுபேர் படுகாயமடைந்தனர். இக் குண்டுவெடிப்பினால் விமான நிலையத்தின் ஒருபகுதிக் கட்டடமும் பலத்த சேதமடைந்துள்ளது. குண்டு வெடிப்பிற்கு எவரும் இன்னமும் உரிமை கோரவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## பொஸ்னியாவின் மீது துண்டுப் பிரசுரங்கள் வீச்சு

(வாஷிங்டன்)

பொஸ்னியாவில் கிழக்குப் பகுதிகள் மேல் அமெரிக்க விமானப்படை விமானங்கள் இரண்டு, பல லட்சம் பிரசுரங்களை வீசியுள்ளது. இப்பகுதிகள் மீது அவசர உணவு உதவிகளை விரைவில் விமான மூலம் அமெரிக்கா வழங்க உள்ளது என்ற செய்தி இத்துண்டுப் பிரசுரங்களில் காணப்படுகிறது.

தமது விமானங்களை சுட வேண்டாம் என அமெரிக்கா இத்துண்டுப் பிரசுரத்தில் சேர்பியர்களைக் கேட்டுள்ளது. வானிலிருந்து உணவுப் பொருள்கள் வரும்போது கவனமாக இருக்கும்படியும் இப்பிரசுரத்தில் கேட்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் பிராங்போட் விமான நிலையத்துக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள உணவுப் பொதிகளில் ஆயுதங்கள் ஏதாவது உள்ளனவா என பொஸ்னியாவில் போராடும் குழுக்களின் பிரதிநிதிகள் சோதித்துப் பார்த்துள்ளனர்.

பொஸ்னியா மீது

## முதல் தொகுதி பொருள்கள் நேற்று போடப்பட்டன

[வாஷிங்டன்]

மூன்று அமெரிக்க சரக்கு விமானங்கள் நேற்று அதிகாலையில் கிழக்கு பொஸ்னியா மீது முதலாவது தொகுதி உணவு மற்றும் மருந்துப்பொட்டலங்களைப் போட்டன. இந்த நடவடிக்கை பொஸ்னியாவில் சமாதானத்தை ஏற்படுத்த உதவக்கூடும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தெரிவித்தார். ஆறு மணிநேரமாக இப் பொதி போடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந் நடவடிக்கையின் பின்னர் விமானங்கள் பத்திரமாக விமானத்தளம் திரும்பியதாக அறிவிக்கப்படுகிறது.

## வீட்டினுள் குண்டுவெடிப்பு ஒருவர் படுகாயம்

(சென்னை)

காமராஜர் மாவட்டத்தில் பத்திராயிதம் என்ற கிராமத்தில் ஒரு வீட்டில் வெடிகுண்டு வெடித்ததில் ஒருவர் பலத்த காயமுற்றார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த வீட்டில் மிகவும் சக்தி வாய்ந்த குறித்த காலத்தில் வெடிக்கும் மூன்று குண்டுகள் வைக்கப்பட்டிருந்ததாகவும், இவற்றில் வெடித்தது போக, மற்ற இரு குண்டுகளும் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் பொலீஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அவுஸ்திரேலியபுலமைப்பரிசில் விண்ணப்பிக்க கோரிக்கை

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்திற்காக தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய உயர் கல்வி நிறுவனங்களினால் அவுஸ்திரேலியாவில் நிர்வகிக்கப்படுகின்ற ஜே. சி எஸ். எஸ். புலமைப் பரிசில்கள் மூலம் பட்டப்படிப்பு மட்டத்தில் எந்தவொரு கற்கைநெறியையும் மாணவர்கள். கற்கமுடியும் இப்புலமைப் பரிசில் பெறுவதற்கு உரித்துடையோர் போட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட இருக்கின்ற போதும் பொருளாதார ரீதியாகப் பாதிப்புற்றவர்களுக்கு சலுகைகளும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் 1993 ஜனவரி 1-ம் திகதியன்று 18-28 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதுடன் அந்தத் திகதிக்குள் தமது இரண்டாம்தரக் கல்வியை பூர்த்தி செய்திருக்கவும் வேண்டும் என்றும், ஆர்வமுள்ளவர்கள் கல்விப் பெறுபேறுகளின் விபரங்கள், பிறப்புச் சான்றிதழின் பிரதி, படித்த பாடசாலை என்பனபோன்ற விபரங்களோடு 1993 ஏப்ரல் 2-ம் திகதிக்கு முன்பாக எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி புலமைப் பரிசில் அதிகாரி, அவுஸ்திரேலிய தூதுவராலயம் த. பெ. இல. 742, கொழும்பு-7 என்பதாகும்.

## 600 ஆரம்ப பாடசாலைகள் விரைவில் தரமுயரும்

(கொழும்பு)

கிராமப்புறங்களில் உள்ள சுமார் 600 ஆரம்பப்பாடசாலைகள் முதல்தரப் பாடசாலைகளாக மாற்றம் செய்யப்படவுள்ளதாக கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி புலேந்திரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி மாற்றம் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படுவதாகவும் கொழும்பிலுள்ள மிகச்சிறந்த பாடசாலைகள் போன்று இப்பாடசாலைகளும் மாற்றப்படும் இதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுவருவதாகவும் முதல் தரப்பாடசாலைகளுக்கு பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை அனுப்புவதில் கரிசனை காட்டுவதனால் கிராமப்புறங்களில் இப்படியானபாடசாலைகளை அமைத்து வசதி செய்து கொடுக்கும் வகையில் இவ்வாறு செய்யப்படுவதாக தெரிவித்தார்.

## பிரதேச சபை முன்பாக சு.கட்சியினர் சத்தியாகிரகம்

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி உறுப்பினர் நிமல் ஜயத்திலக தலைமையில் பலாபத்வெல பிரதேசசபை முன் கடந்த 25 ஆம் திகதி சத்தியாக்கிரகப் போராட்டம் நடாத்தப்பட்டது.

பத்திரிகைச்சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இப்போராட்டம் நடாத்தப்பட்டது இப்போராட்டத்தை மாத்தளை மாவட்ட பலாத்வெல பிரதேசசபை உறுப்பினர்கள் நிமல்ஜயத்திலகதலைமையில் பிரதேசசபை கட்டடத்தின் முன் நடாத்தினர்

## மரண அறிவித்தல்



சில்லாலை

### டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி

சில்லாலை டாக்டர் றெஜினோல்ட் சுகந்தன் இன்னாசித்தம்பி 1-3-93 அன்று காலமாகிவிட்டார். இவர் சில்லாலை காலஞ்சென்ற டாக்டர் பற்றிக்இம்மானுவேல் இன்னாசித்தம்பி, திருமதி றீற்றா இன்னாசித்தம்பி அவர்களின் அன்புப்புதல்வனும், ஜொவித்தாவின் அருமைக் கணவரும், துஷாரா, தனுஷ்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீமகள் பிள்ளைநாயகம், ஜெயந்தன், ரவீந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிள்ளைநாயகம், பிறீனி, அருட் சகோதரி ஜிசிந்தா மாறி (தி. கு. க. சபை) நீத்தாதோமஸ், நியந்தன், ரிஷந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 03-03-93 புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து புனித அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் சில்லாலை இன்னாசித்தம்பி ஞாபகார்த்த சிற்றாலயத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
171, பிரதான வீதி, யாழ்ப்பாணம்,
ஜொவித்தா (மனைவி)

(சி-6115)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## வீரவணக்க கூட்டம்

[யாழ்ப்பாணம்]

பெப்ரவரி மாதத்தில் வீரச்சாவடைந்த தீவகப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களான கப்டன் ரூபன், லெப். சுரேஷ், லெப். விக்கினேஸ், வீரவேங்கைகள் லவனிதா, சிவசிறி ஆகியோரின் வீரவணக்கக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை இரவு யாழ். புகையிரத நிலையத்தில் நடைபெற்றது. தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செம்மணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நல்லூர் வட்ட பொறுப்பாளர் திரு. எழிலன், மகளிர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு, நாச்சியார் மைந்தன் ஆகியோரின் நினைவுப் பேருரைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(22, 90)

## அதிபர்களுக்கான கூட்டம்

வடமராட்சி கல்விக்கோட்ட பகுதியிலுள்ள அதிபர்களுக்கான முக்கிய கூட்டமொன்று 4ஆம்திகதிபி. ப.2.00மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறுமெனவும், இக்கூட்டத்தில் சகல அதிபர்களும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமெனவும் வடமராட்சி கோட்ட கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்வத்துரை அறிவித்துள்ளார்.

(25)

## கோழிகளுக்கு தடுப்பூசி

கோழிகளுக்கு தடுப்பூசி வழங்க சுன்னாகம் ஐயன்னா சனசமூக நிலையத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்ற விரும்புவோர் நாளை 3-ம் திகதிக்கு முன்னர் மாலை 3 மணி முதல் 5 மணி வரை மேற்படி சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(11)

## கிளாலியில் ஹெலி தாக்கு

(யாழ்ப்பாணம்)

கிளாலி பகுதியில் நேற்று மாலை சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான உலங்குவானூர்தியொன்று தாக்குதல் நடாத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலும் இடம்பெற்றதாக தெரியவருகிறது.

### செயற்கை

கால் அளவுகள் எடுக்கப்பட்டு அச்சுத் தயாரிக்கப்பட்டு கண்ணாடி இழைகள், ஒருவகைப் பசை என்பன கொண்டு இவ்வகை செயற்கைக் கால்கள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் இச்செயற்கைக் கால்கள் நன்கு பொருந்துகின்றன. பெங்களூரிலுள்ள காலிழந்தோர் மீட்பு மையத்தில் இதுவரை 300க்கு மேற்பட்டோர் இவ்வகை செயற்கைக் கால்களை இலவசமாகப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### மன்னாரில்

கில் மற்றும் துவிச்சக்கரவண்டிகளும் பெறுமதிமிக்க பொருள்களும் சேதமடைந்துள்ளன.

இச்சம்பவத்தில் வேறு ஓர் குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி பலியானதாகவும் மூவர் காயமடைந்ததாகவும் தெரிய வருகின்றது. இருந்தும் இவர்களின் பெயர் விபரங்களை அறிய முடியவில்லை. பாலியாற்றில் வீசப்பட்ட குண்டினால், சீமெந்தினால் அமைக்கப்பட்ட தண்ணீர்த்தாங்கி ஒன்றும் சேதமடைந்ததாக தெரியவருகின்றது. (பா)

## சைவச் சிறார் இல்லம்; 10 ஆம் திகதி கொடிதினம்

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச்சிறார் இல்லத்தின் கொடிதினம் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை யாழ்மாவட்டம் முழுவதும் நடாத்த யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அன்று பாடசாலைகள், திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், பொதுஇடங்கள் ஆகியவற்றில் கொடிகள் விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வைபவரீதியாக கொடி விற்பனை இந்துசமயப் பேரவைத் தலைமைக் காரியாலயத்திலும், கைதடி சிறுவர் இல்லத்திலும் ஆரம்பித்து வைக்கப்படும்எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கொடிதினம் மூலம் சேர்க்கப்படும் பணம் போரினால் தாய்தந்தையரை இழந்து அனாதரவாக்கப்பட்டுள்ள குழந்தைகளைப் பராமரிக்கவும், ஆதரவற்றோருக்கு உதவவும் பயன்படுத்தப்படும் என யாழ். இந்துசமயப் பேரவையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

## நான்கு பயணிகள் கடற்படையால் கைது

கிளாலி - பூநகரி பயணிகள் படகில் பயணம் செய்த நால்வரை கடற்படையினர் கைது செய்து கொண்டு சென்ற சம்பவமொன்று கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றதாக தெரியவருகின்றது. இச்சம்பவத்தின் போது கடற்படையினரிடம் அகப்படாது படகிலிருந்து காயங்களுடன் தப்பி வந்த சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த காசித்தம்பி ஸ்ரீமுருகராசா [வயது29] என்பவர் மேற்படி சம்பவம் குறித்து தகவல் தந்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து அவர் கூறுகையில்;

நான் 14-ம் திகதி இரவு பூநகரியில் இருந்து பொருள்கள் ஏற்றிவரும் படகு ஒன்றில் கிளாலி கரையை நோக்கி பயணம் செய்தேன் என்னோடு சாவகச்சேரி கோயில் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் சுரேஸ் என்பவரும் வந்தார். எல்லாமாக படகில் ஐந்துபேர் பயணம் செய்தோம் 7.00மணியளவில் எம் படகினை கடற்படையினர் விசைப்படகு மூலம் நெருங்குவதை கண்டேன். கிட்ட வந்தவுடன் வெடிச்சத்தம் கேட்டது நான் உடன் படகின் அணியத்துக்குள் போய் விட்டேன். என்னோடு வந்தவர்கள் நால்வரும் கடலில் பாய்ந்து விட்டனர்.

கிட்ட வந்த கடற்படையினர் தமிழில் கதைத்தனர். பாய்ந்தவர்களை உடன் தமது படகில் ஏறுமாறு உத்தரவிட்டனர். உடன் 4பேரும் படகில் ஏறினர். பின்னர் நான் பயணம் செய்த படகிற்கு பின்னாக இன்னும் ஒரு படகு இணைக்கப்பட்டது அதற்கு படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

எனது காலில் ஒரு குண்டு பாய்ந்தது.

உடன் கடற்படையினர் சென்றுவிட்டனர் நான் மேல் வந்து காலை 6 மணிவரை பார்த்துக் கொண்டிருந்தேன் ஒரு படகையும் காணவில்லை. பின்புதான் பொருள்களை ஏற்றிய ஒருபடகு வந்தது. இதற்கு சைகை காட்டி வரவழைத்துத்தேன். அவர்கள் என்னை பூநகரி கரையில் கொண்டு சேர்த்தார்கள்.

### டாக்டர் சுகந்தன் மரணமானார்

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடமாகாண ஆணையாளரும், லங்கா ஆயுர்வேத கல்லூரியின் அதிபருமான சில்லாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி நேற்று மாரடைப்பால் மரணமானார்.

இன்னாசித்தம்பி பரம்பரையின் பத்தாவது வைத்தியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஓர் தலைசிறந்த சமூகசேவையாளர் என்பதுடன் பல முதலுதவியாளர்களை உருவாக்கியவர். அன்னாரின் இழப்பு தமிழீழ தேசத்திற்கு ஒரு பேரிழப்பாகும் என்பதில் ஐயமில்லை.

### அவசரகால

அரசாங்கம் பலரை பலவருடகாலம் தடுத்து வைத்திருக்கின்றது என அவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 20,000 தோட்டத்

தொண்டமான் பல முதலாளிகளிடம் கலந்து உரையாடியதாகவும் ஆனால் இன்று வரை இதற்குபதில் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

தொழிலாளரின் நலன்கள் பேணப்பட வேண்டும். அவர்களுக்கு வழங்க வேண்டிய வேலை நாள் வழங்கப்பட வேண்டும். அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த இலங்கை தோட்ட தொழிலாளர் காங்கிரஸ் என்றும் பின்னிற்காது என்றும் அவர் கூறினார்.

### 58 இந்திய

தமிழ் நாட்டு அரசிடம் தமிழ் நாடு விசைப்படகுகள் சங்கம் கேட்டுள்ளது. இவ்வளவு அதிக எண்ணிக்கையில் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளது இதுவே முதற்தடவையாகும்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 01-03-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 8431

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

28-6546, 43-1019, 26-5870, 41-9530, 42-6452, 24-5774, 28-2385, 41-9876, 27-9083, 26-5202, 40-1352, 27-1637, 42-728, 28-882, 27-7263, 28-732, 40-1658, 27-9416, 24-5967.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்

42-8316, 24-5939, 24-8391, 28-159, 28-0940, 42-9345, 27-2107.